# சங்க இலக்கியங்கள் காட்டும் வாழ்வியல் விழுமியங்கள்

*முனைவர் கா. சந்தானலெட்சுமி*
இணைப்பேராசிரியர் மற்றும் தமிழ்த்துறைத் தலைவர்
மன்னர் துரைசிங்கம் அரசு கலைக்கல்லூரி, சிவகங்கை

மலர்: 11

சிறப்பிதழ்: 1

மாதம்: ஏப்ரல்

வருடம்: 2024

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v11iS1-April.7729

## *முன்னுரை*

*சங்க இலக்கியங்களை திணை இலக்கியங்கள் என்பர். செவ்வியல் தன்மை பெற்ற இவ்விலக்கியங்கள் காலம் கடந்து நிற்கும் முழுமைத்தன்மையுடையதும், செம்மையானதும் ஆகும். செவ்வியல் இலக்கியங்களைக் கொண்டதால் தமிழ் மொழி செம்மொழி ஆகியது. உலகின் தொன்மையான நாகரிகங்களுக்கு ஆதியாகவும் அவற்றோடு தொடர்புடையதாகவும் தமிழர் நாகரிகம் இன்று வரைத் திகழ்கிறது. தமிழரின் அடையளமாக உள்ள செவ்வியல் இலக்கியங்களான சங்க இல்க்கியங்களை மாதிரி ஆய்வு அணுகுமுறை, சமூகவியல்'' ஆய்வு அணுகுமுறையில் நோக்கி சங்க இலக்கியங்கள் வெளிப்படுத்தும் வாழ்வியல் விழுமியங்களை வரையறை செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.*

## வாழ்வியல் விழுமியங்கள்

*மனித வாழ்க்கையோடு இரண்டறக் கலந்தவை விழுமியங்கள் ஆகும் மனிதனுடைய நம்பிக்கைகள் எண்ணங்கள் கருத்துருவாக்கத்தின் அடிப்படையில் அமைந்தவைகளே விழுமியங்கள் எனப்படுகின்றன தொல்காப்பியம் மற்றும் சங்க இலக்கியங்களில் "விழு" என்பதே விழுமியம் என்ற சொல்லின் வேர்ச்சொல்லாக அமைந்துள்ளது.*

**விழுமம் சீரமையும் சிறப்பும் இரும்பையும்பாக**

**(தொல் - சொல் உரி -55)**

*"விழுமம் என்ற சொல்லிருந்து விழுமியர் என்ற சொல்லை இளம்புரணர் தருவித்துக் கொள்கிறார். விழுமியம் என்ற சொல்லுக்கான பொருளாக மதிப்பு என்பது இக்காலத்தில் வழங்கப்படுகிறது.[1] விழுமியங்கள் மனித வாழ்வை ஒழுங்கமைப்பதை நோக்கமாக கொண்டவை. சமூகத்திற்கே பொதுவாக உள்ள விழுமியங்கள் பண்பாட்டு விழுமியங்கள் எனப்படுகின்றன. மனித வாழ்க்கையின் உயிர் நாடியாக விழுமியங்கள் அமைகின்றன*

## சங்க இலக்கியங்களில் தமிழர் வாழ்வியல்

தமிழ் நாகரிகத்தின் தொன்மை இலக்கியங்களாக சங்க இலக்கியங்கள் அமைகின்றன. "இலக்கியத்தின் ஆவணத்தன்மை அதன் பிரதிபலிப்புத்திறன் ஆகியவற்றைப் பற்றி[2] ஃபெர்னான்டோபொயத்தொஸ்கூறும் மதிப்பீடுகள் இன்றியமையாதவை ஆகும். இலக்கியங்களைப் படைத்தளிப்பதற்குப் பின்னணியாக விளங்கும் சமுதாயத்தின் பண்பாட்டினைத் தொடர்ந்து ஆவணப்படுத்தும் அந்த செயலை அந்த இலக்கியங்களே செய்து வருகின்றன என்னும் கருத்தினை இலக்கிய மானிடவியல் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகிறார்." தமிழர் வாழ்வியலை ஆவணப்படுத்தும் முக்கிய சான்றுகளாக சங்க இலக்கியங்கள் திகழ்கின்றன. "தமிழர் பண்பாட்டை இயன்றவரையில் ஆவணப்படுத்தி வந்துள்ளமையே பல்வேறு இலக்கிய ஆய்வுகள் கோடிட்டு காட்டியுள்ளன. சங்க இலக்கியங்கள் அகப்பண்பாடு, புறப்பண்பாடு இரண்டும் கலந்த கலவையாக திகழ்கின்றன. மன உணர்வு சம்பந்தப்பட்ட விடயங்கள்அகப்பண்பாடாக அமைகின்றன. வீரம், போர், அறம், கொடை முதலானவை புறப்பண்பாட்டை உருவாக்குகின்றன. இவ்விரண்டும் ஒன்றோடு தொடர்புடையதாக அமைந்த மனித வாழ்க்கையை நடத்திச் செல்லும் பொழுது அந்நாகரிகம் காலங்கடந்தும் நிலைபேறு உடையதாகவும் ஏனைய நாகரிகங்களுக்கு எடுத்துக்காட்டாகவும் திகழ்கின்றன. அவ்வகையில் தமிழர் நாகரிகம் முதலிடம் பெற அந்நாகரிகத்தின் வாழ்வியல் விழுமியங்கள் அடிப்படை ஆகின்றன.

## அகப்பண்பாட்டு விழுமியங்கள்

அகப்பண்பாட்டினை உணர்த்துவனவாக சங்ககால அக இலக்கியங்கள் உதவுகின்றன. "பண்பாடு - நம் முன்னோர் கண்ட நாகரிகத்தின் அகக்கூறாகக் கருதலாம். அகப்பண்பாட்டினை இரு கண்களாகவும் கற்பும் விளங்குகின்றன. திணை சார்ந்த வாழ்வியலையும் அகப்பண்பாடு உணர்த்துகிறது.

தலைவன் தலைவியின் களவு வாழ்க்கையில் அன்பே முதன்மையானதாக அமைந்துள்ளது. அதற்கு பிரபஞ்சமே எல்லையாக அமைவதை குறுந்தொகைப் பாடலானது,

**நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்றே**
**நீரினும் ஆரளவின்றே சாரல்**
**கருங்கோல் குறிஞ்சிப்புக் கொண்டு**
**பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே**
**(குறுந்தொகை-3)**

என வருணிக்கிறது.[3] அன்பின் அளவுகோல் பிரபஞ்சமே என தெளிவுபடுத்துகிறது. அன்பின் அடையாளம் குறிஞ்சி. அகப்பண்பாட்டின் அடையாளம் குறிஞசிப்பாட்டு என்பது எத்தன்மையது என்பதை சங்க அகப்பாடல் தெள்ளிதின் உணர்த்தும்.

தனது காதலின் செழுமையையும் உண்மையையும் உணர்த்தும் வகையில் தலைவியின் கூற்றாக அமைந்த நற்றிணைப் பாடல் அகவொழுக்கத்தின் விழுமியத்திற்கான சிறந்தோர் அடையாளமாகும்.

**நிறை சொல்லர் நீடுதோறு இனியர்**
**என்றும் என்தோள் பிரிபு அறியலரே**
**தாமரைத் தண்தாது ஊதி மீமிசை**
**சாந்தில் தொடுத்த தீம்தேன் போலப்**
**புரைய மன்ற புரையோர் கேண்மை**
**நீரின்று அமையா உலகம் போலத்**
**தம்மின்று அமையா நம் நயந்தருளி**
**நறுநுதல் பசத்தல் அஞ்சிச்**
**சிறுமை உறுபவோ செய்பு அறியலரே"**
**(நற்றிணை - 1)**

என்பதில் தலைவனின் உறவு தேனுக்கும், நீருக்கும் உவமைப்படுத்தப்பட்டுள்ளது, இரண்டுமே இயற்கையானது. என் தோள் பிரியாத தலைவர் "நீடுதோன்று இனியர்" உருவத்தில் மட்டுமல்ல பழக்கத்திலும் "நின்ற சொல்லர்" மாறாத வாக்குத்தன்மை உடையவர். நீரின்றி அமையாது உலகம் போல அவரும் நானும் பிரிதல் அறிய மாட்டோம். என்னுடைய பசலை அலராகி

சிறுமை சேர்க்கும் என்பதை அவர் நன்கு அறிந்தவரே. எனவே பொருள் வயிற் பிரிந்த தலைவன் திரும்பிவருவான் எனத் தலைவி தனது ஆத்ம நம்பிக்கையை அகவாழ்வின் அடித்தளத்தைத் தோழியிடம் பகிர்வதை இந்த அகப்பாடல் வழி அறிய முடிகிறது.[4]

"படைப்பாளிகள் தாம் எந்த ஒரு சமுதாயத்தைச் சார்ந்திருக்கிறார்களோ அந்தச் சமூதாயத்தின் பொதுவான பண்பாட்டுக் கூறுகளை அவர்கள் படைக்கும் இலக்கியமானது நேரிடையாக இல்லாவிட்டாலும் கூட பிரதிபலிக்கவே செய்யும்[5] என்ற கூற்றிற்கு ஏற்ப அகப்பாடல்கள் காட்டும் வாழ்வியல் விழுமியங்கள் அக்கால மக்களின் வாழ்க்கையை பிரதிபலிப்பதாகவே உள்ளது.

கி.மு 3000 ஆண்டுகளுக்கு முன்பிருந்த இந்த வாழ்வியல் விழுமியங்கள் இன்று வரை தொடர்வதே தமிழரின் நாகரிகத்தின் சிறப்பினைக் காட்டும். இந்த நாகரிகச் சிறப்பே "நஞ்சும் உண்பர் நனி நாகரிகர்" என்ற பெருமை தமிழினத்திற்கே பெற்றுத் தந்தது என்றால் அது மிகையல்ல.

**விருந்தோம்பல்**

களவு, கற்பு என்ற நிலைகளிலும் விருந்தோம்பல் நடைபெறும். ஊடல் தணித்தல் பொருட்டு கற்பில் விருந்தோம்பல் நிகழும். களவிலும் விருந்தோம்பல் நிகழ்வதை சங்க அகப்பாடல் அழகுற சுட்டுகிறது.

**"விருந்து தானே புதுவதன் மேற்றே"**

**(தொல் - செய் -2)**

என்பதில் புதியவதை உபசரிப்பதே விருந்தெனத் தொல்காப்பியர் கூறியுள்ளார். அனிச்சம் பூவிற்கு இணையாக விருந்தோம்பலை வள்ளுவர் கூறியுள்ளார். "இல்வாழ்க்கையில் ஈடுபட்ட பெண்டிர் விருந்தினரைப் போற்றி வரவேற்று உபசரிப்பதை முக்கியமான குறிக்கோளாகக் கொண்டிருந்தனர். வாழ்வின் உயரிய விழுமியங்களில் விருந்தோம்பல் ஒன்றாக அமைகிறது. அகவாழ்வில் களவு வாழ்க்கையில் நிகழும் நிகழ்வு ஒன்று இங்கே தரப்படுகிறது.[6]

"இல்லீரே உண்ணுநீர் வேட்டேன்" என்று அயலான் ஒருவன் ஒரு வீட்டில் நீர் கேட்கிறான். நீர் கேட்கும் தலைவனும் தலைவியும் முன்பே அறிந்தவர்கள். ஆனால் இவர்கள் நட்பு தலைவியின் தாயாருக்கு தெரியாது. நீர் கேட்டவுடன் தலைவியைச் சென்று நீர் தரச் சொல்கிறாள் தலைவியின் தாயார். என்ன ஒரு சூழ்நிலை வாழ்வியலை உணர்ந்து புலவர் காட்சியாக்கி இவ்வரியைத் தந்துள்ளார். தலைவனைக்கண்டு தலைவி கூச்சலிட அதை தாயார் அறியா வண்ணம்,

"உண்ணுநீர் விக்கினான்" என தலைவி பதிலளிக்கிறாள். அதைக்கேட்ட தலைவியின் தாயார் பரிதவித்துப்போய் தலைவனின் முதுகை தடவி விடுகிறாள். இதில் உணவு தருதல், நீர் தருதல் வெறும் வாழ்வியல் கடமையாக இல்லாமல் உள்ளார்ந்த மானுட அன்பின் சிறப்பினை உணர்த்துவதாக உள்ளது. இத்தகைய விழுமியங்களே மனித வாழ்க்கையை மாண்புடையதாகச் செய்யும் என்பது உறுதியானதாகிறது.

**வறுமையிலும் செம்மை**

தேனாடு தீம்பால் கலந்த பொற்கிண்ண சோற்றினை மறுத்து ஓடிய செல்வச்சி றுமியாக வளர்ந்த தலைவி உடன்போக்கில் செல்கிறாள் கொண்ட கொழுநன் இல்லம் வறுமையில் உள்ளது. ஆற்றொழுக்கும் நுண்மணல் போல ஒரு வேளை மறுத்து

ஒருவேளை உண்ணுகின்ற வாழ்வியல் அறத்தை இவள் எங்கு கற்றாள் என்பதனை

**"பிரசம் கலந்த வெண்சுவை தீம்பால்**
**விரிகதிர்ப் பெற்கலத்து ஒருகை ஏந்தி**
**அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந்தாள்கொல்**
**ஒழுகுநீர் நுணங்காரல் போல்**
**பொழுது மறுத்து உண்ணும் சிறு மது கையளே"**

**(நற்:10)**

என்னும் பாடல் வரியில் தன் பெற்றோர் இல்லன் செல்வச் செழுமையை எண்ணவில்லை இதனை எண்ணி இப்போது வாழ்க்கை இப்படியுள்ளதே என்று துன்புறவும்

இல்லை தான் தேர்ந்த வாழ்க்கை குறைவின்றி அதனை அத்தலைவி செய்கிறாள். ஒரு வேளை மறுத்துண்ணும் பழக்கமும் பிறர் அறியா வண்ணம் செய்கிறாள். இதனை,

**தற்காத்து தற்கொண்டார் பேணி தகை சான்ற**
**சொற்காத்து சோர்விலார் பெண் (குறள்: 56)**

என்ற குறட்பாவும் இத்தகைய சங்கத் தலைவியரின் பொருட்டே எழுதப்பட்டிருக்க வேண்டுமென எண்ணத் தோன்றுகிறது.

**தேன் மயங்கு பாலினும் இனிய நாட்டில்**
**உவலை கூவல் கீழே**
**மானுண்டு எஞ்சிய கழிநீரே நீரென"**
**(ஐங் : 203)**

மற்றொரு தலைவி தண்ணீருக்குக் கூட தன்னிலை விளக்கம் தருவதைக் காண முடிகிறது அன்பிருக்கும் இடத்தில் அனைத்தும் அற்புதமாக இருக்கும் அதனால் தான் "அன்பே சிவம்" என்றார்கள் அன்பும் அறனும் கொண்ட இல்லறத்தால் வாழ்வாங்கு வாழ்பவர்கள்வானுறையும்இறைவனுக்கும் சமமாகக் கருதப்படுவார்கள் என அறவழிப்பட்ட வாழ்வியல் விழுமியத்தை வள்ளுவரும் வெளிப்படுத்தியுள்ளார்.

## முடிவுரை

கீழடி அகழாய்வு காலந்தொட்டு இன்று வரை மனித வாழ்வியல் விழுமியங்களை சங்கப்பாடல்கள் சுரந்து கொண்டிருப்பதை இவ்வாய்வு தெளிவுபடுத்துகிறது. தகவல் தொழில்நுட்ப ஊடகங்கள் சில வாழ்வியல் நச்சுக்களை நடைமுறையில் விதைத்தாலும் அவைகளை வேரறுக்கும் மகா அமுதமாக சங்கப்பாடல்கள் திகழ்வதை இன்றும் காண முடிகிறது. இத்தகைய வாழ்வியல் விழுமியங்களைக் கொண்டதாலே தமிழர் நாகரிகம் தொன்மையும் தொடர்ச்சி உடையதாக உலகெங்கும் பரவி இன்று வரை உயிர்ப்புடன் உலகிற்கே வரமளித்துக் கொண்டிருக்கிறது.

## குறிப்புக்கள்

1. ப.பத்மநாபன், தொல்காப்பியம் காட்டும் விழுமம் dinamani.com 2018/02/11
2. ஆ. தனஞ்செயன், தமிழ் இலக்கிய மானிடவியல் ப.24
3. மேலது ப.33
4. க.த திருநாவுக்கரசு(ப.ஆ) தமிழர் பண்பாடு ப.9
5. மேலது ப.23
6. மேலது ப.24

## துணைநூற்பட்டியல்

1. தனஞ்செயன். ஆதமிழ் இலக்கிய மானிடவியல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை. முதல் பதிப்பு 2014
2. திருநாவுக்கரசு (ப.ஆ) தமிழ்ப்பண்பாடு, உலகத்தமிழாராய்ச்சிநிறுவனம்,இரண்டாம் பதிப்பு 2009
3. பத்மநாபன் பா. தொல்காப்பியம் காட்டும் விழுமம், dinamani.com 11/2/2018